**மட்டக்களப்பு மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையிடமிருந்து பெறவேண்டிய சம்பள மீளளிப்பு தொகை ரூபா 13,005,946 நிதிக்கூற்றில் பெறவேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதிக்கூற்றில் சம்பள மீளளிப்புத் தொகையை பெற வேண்டியதாகக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டியவைகள் சொத்தாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | முடிவடைந்த வேலைகள் தொடர்பில் மாகாண சபையிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ரூபா 2,296,382 தொகை நிதிக்கூற்றில் பெறவேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மாகாண சபையிடம் பெறவேண்டிய தொகை பொறியியலாளர் பகுதியிலிருந்து பெறப்பட்டு அடுத்த நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டியவைகள் சொத்தாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான பொது நூலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 892,680 பெறுமதியான புத்தகங்கள் நன்கொடையாக கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அவை கணக்குகளில் சொத்தாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற புத்தகங்கள் தவறுதலாக விடப்பட்டுள்ளது. இவ்வருடம் இவற்றை சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நன்கொடைப் புத்தகங்கள் சொத்தாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக் சோசலிசக் குடியர சின் நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டு இறுதிவரை பல்வேறுபட்ட தேவைகளுக்கு வைப்பிலிடப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டு வரும் ரூபா 3,115,424 வைப்புக்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | பல வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது டன் ஏனைய வைப்புக்களையும் உரியவர்களுக்கு வழங்க அல்லது வருமானத்திற்கு மாற்ற நடவடி க்கை எடுக்கப்ப டும். | வைப்புக்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 153,674,005 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 117,648,379 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடை வாடகை மற்றும் குத்தகை தொடர்பில் பல வருடங்களாக நிலுவையாக உள்ள ரூபா 4,521,815 நிலுவையினை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை செலுத்தத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. செலுத்தத் தவறிய மிகுதிக் குத்தகைதாரர்கள் மீதும் வழக்கு தொடர்வதற்கான ஆவணங்கள் மாநகர சபைச் சட்டத்தரணியிடம் ஒப்படை க்கப்பட்டுள்ளது. | வாடகை மற்றும் குத்தகை நிலுவை களை அறவிட்டுக் கொள்வதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க ப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உயிர்வாயு தயாரித்தல் திட்டத்திற்காக ரூபா 02 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரை உயிர்வாயு உற்பத்தி, பயன்பாடு என்பவை சபையினால் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. | உயிர்வாயு தயாரிப்புத் திட்டமானது விநியோகிப் பதற்குரிய கொள்கலன் களில் அடைக்கக் கூடிய தொழிநுட்ப வசதி இல்லா மையால் நடைமுறைப்ப டுத்த முடியாத நிலை யிலுள்ளது. | உயிர்வாயுத் திட் டத்தை நடைமு றைப்படுத்துவதற் கு காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பன்றிகள் வளர்ப்பு திட்டத்திற்காக ரூபா 1,480,066 செலவிடப்பட்டிருந்த பொதும் மீளாய்வாண்டின் இறுதிவரை எவ்விதமான வருமானமும் சபையினால் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எம்மால் கோரப்பட்ட கேள்வி கோரலுக்கு பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மீள் கேள்வி கோரல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | திட்டத்திலிருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்வத ற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கடந்த 04 ஆண்டுகளில் சபையின் அதிகார எல்லையினுள் உரிமை மாற்றம் செய்யப்படும் அசைவற்ற சொத்துக்களுக்கான முத்திரை தீர்வை ரூபா 15,939,000 தொகை போதிய சான்றுகளின் இணக்கமின்மை காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதனை மிகவிரைவில் பெற்றுக்கொள்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படும். | முத்திரைத் தீர் வைகளை உரிய காலப்பகுதியில் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் காணியை உபபிரிகை செய்து விற்பனை செய்வது தொடர்பில் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் அவரது பெயரிலும் அவரது மனைவியின் பெயரிலும் 2003 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | குறித்த விடயம் தொடர் பாக நடவடிக்கை தற் போது மேற்கொள்ளப்ப டுகிறது. | உரிய விசார ணை மேற்கொள் ளப்பட்டு அரச சொத்துக்களை சபையின் பெயரு க்குமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 10,435,141 பெறுமதியான குறித்தொதுக்கப்பட்ட நோக்க மூலதன மானிய அடிப்படையில் கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட நிதி குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 05 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சி | இந்நிதி தொடர்பாக வருமானம் ஈட்டும் நடவடிக்கை மேற்கொள்வ தற்கான செயற்திட்டம் சபை அனுமதியுடன் உள்ளூராட்சி ஆணையா ளின் அனுமதிக்காக | நிதியினை குறி த்த நோக்கத் திற்கு பயன்படுத் துவதற்கும் இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | யாக வங்கிக் கணக்கொன்றில் பயனற்று வைக்கப்பட்டுள்ளது. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட வாடிவீடுகள் தொடர்பில் 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 507,000 குத்தகை நிலுவைத் தொகையினை அறவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை குத்தகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாததால் வழக்குத் தாக்கல் செய்ய சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிட அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, மாநகர சபையினால் 31 வகையான பதவிகளுக்குரிய 171 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஆளணி வெற்றிடஙகளையும் நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுனருக்கு பிரதம செயலாளர் ஊடாக கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வுபெற்ற, மரணித்த, பணி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 12 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 557,812 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையினை சபை எடுத்திருக்கவில்லை. | ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து, பிணையாளரிடமிருந்தும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஊழியர்களது கடன் நிலுவை சம்பந்தப்பட்ட திணைக்களங்களிலிருந்தும் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகளை அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை | இனி வரும் காலங்களில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சேர்த்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் மாநகர சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளை இனங் கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |